# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Multidisilinary Journal )
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :24 October 2024
கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**


**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்




இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih”: Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்

# *S. DHARMAN PADAIPPPUGALUM ANNIYAMATHALUM*

*M. Muthumari* மு. முத்துமாரி,
*Reg.No.: MKU22PF0L10343* பதிவு எண்: MKU22PF0L10343
*Madurai kamaraj University* மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
*Madurai — 625 021* மதுரை — 625 021

நெறியாளர்: முனைவர் செ. கிளிராஜ்,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சிவகாசி.

*Supervisor: Dr. KILIRAJ S*
*Associate Professor and Head,*
*Department of Tamil,*
*Govt. Arts and Science College,*
*Sivakasi.*

**ஆய்வுச் சுருக்கம்:**

மனிதனை மனிதன் அந்நியப்படுத்தும் நிலையை சோ.தர்மன் புதினம் வழியாக அறிய முடிகிறது. மக்கள் எல்லோரும் பொதுவாகவும் இயல்பாகவும் பயன்படுத்தக்கூடிய இடங்கள் பல உள்ளன. சமூகம் மக்களை அந்நியப்படுத்தும் நிகழ்வினை நாவல் மூலம் அறிய முடிகிறது. முதலாளித்துவம் மக்களிடம் அடிமைத் தொழில் செய்வதும் அடங்கி நடப்பதும் நடைமுறையில் உள்ளன. முதலாளித்துவத்தினர் வரும் போது எதிர்நிற்பதோ, சமநிலையில் நடந்து செல்வதோ அவரைத் தாண்டித் செல்வதோ கடுமையான குற்றமாகக் கருதித் தண்டிக்கப்பட்டனர். இது முதலாளித்துவத்தின் செயல்பாடுகள் அதிகாரத்தின் அத்துமீறல்களையும் வெளிப்படுத்தும் செயல்பாடாகும். சமூகம் சிக்கலின்றி இயங்குவதற்குச் சமூகக் குருக்களிடையே நல்லுறவு பராமரிக்கப்பட வேண்டும். ஒருவர் மற்றொருவருக்குத் தேவை என்பதை உணர வேண்டும். இனத்தால் அடிமைப்பட்டுக் கிடந்த ஒடுக்கப்பட்ட மக்கள் படிப்படியாகத் தங்களுக்குள் நாமும் மனிதர்கள் தான் என்பதையும் தாங்களும்; மற்ற மனிதர்களைப் போல் மனித நேயத்துடன் நடத்தப்பட வேண்டும் என்று கருதுகின்றனர். காலம் காலமாக மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவு அவற்றை உருவாக்கும் விவசாயி மழையின்றி வறுமை காரணமாக நகரத்திற்கு சென்று தன்னுடைய வாழ்க்கையிலிருந்து மட்டும் அல்லாமல் அவன் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றால் மாறி வாழ்கிறான்.

## *ABSTRACT*

*Manitanai maintain anniyappatuttum nilaiyai co. Tarman putinam valiyakaariya mutikiratu. Makkal ellorum potuvakavum iyalpakavum payanpatuttakkutiya itankal pala ullana.camukam makkalai anniyapatuttum nikalvinai naval mulam ariya mutikiratu. Matalalittuvattinar varum potu etirnirpato, camanilaiyil natantu celvato avarait tantit celvato katumaiyana kurramakak karutit tantikkappattanar. Itu mutalalittuvattin ceyalpathukal atikarattin attumiralkalaiyum velippatutum ceyalpatakum. Camukam cikkalinri iyankuvatarkuc camukak kurukkaliraiye nalluravu paramarikkappata ventum. Oruvar marroruvarukkut tevai enpatai unara ventum. Inattal atimaippattuk kitanta otukkappatta makkal patippatiyakat tankalukkul namum manitarkal tan enpataiyum tankalam marran manitarkalaip pol manita neyattutan natattappta ventum enru karutukinranar. Kalam kalamaka manithain atippatait tenvaikalil onrana unavu avarrai uruvakkum vivacayi malaiyinri varumai karanamka nakarattirku cenru tannutaiya valkkaiyiliruntu mattum allamal avan kalaccaram panpatu akiyavarral mari valkiran.*



**திறவுச்சொற்கள்:**

பொருளாதாரம் - சமூகம் - மனிதத்தன்மை — முதலாளித்துவம் - தொழிலாளித்துவம் - ஒடுக்குமுறைகள் - அடிமைத்தனம் - அதிகாரத்துவம் - சமூகப்பிரச்சனைகள் - மனித நேயம் - கலாச்சாரம் - மனித உறவுகள் - பொதுவுடைமை — அந்நியமாதல் வறுமை — உணவு

## *Keywords:*

*Porulataram — camukam — manitattanmai — mutalalittuvam — tolilalittuvam — otukkumuraikal — atimaittanam — atikarattuvam — camukappiraccanaikal — manita neyam — kalaccaram — manita uravukal — potuvutaimai — anniyamatal varumai - unavu*


**முன்னுரை:**

இலக்கியம் தோன்றிய காலத்திலிருந்து மனிதன் தன் மனதில் தோன்றிய பல எண்ணங்களைச் சுதந்திரமாகப் பதிவிட ஆரம்பித்தான். அதுபோல மனிதன் தனக்குள் எண்ணியக் கருத்தினை சமுடதாயத்தில் அந்நியப்படும் சூழலையும் சமூகம் மனிதரை அந்நியப்படுத்தும் சூழலையும் இலக்கியம் கொண்டு விமர்ச்சிக்க விரும்புகிறேன். சோ. தர்மன் படைப்பில் தூர்வை, கூகை போன்ற புதினங்களில் காணப்படும் கரிசல் காட்டு மாந்தர்களின் இருத்தலின் விளிம்பு நிலையையும் அந்நியப்படுத்தும் மக்களின் வாழ்வாதாரங்களையும் இக்கட்டுரையில் விளக்கமுயலுகிறேன். மேலும் மார்க்சியவாதிகளால் கவனத்திற்குட்படுத்தப்பட்ட அந்நியமாதல் என்ற பிரச்சினை முற்றிலும் நவீனமான நிகழ்ச்சிப் போக்கல்ல, மனிதன் தனக்குதானே

அந்நியப்படுதலும், பிறரால் அந்நியப்படுத்துதலும் குறித்த அறிஞர்களின் கருத்துக்களைக் கூறுவதோடு, பார்வைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப் புதினங்களில் அந்நிய மாதலுக்குள்ளான பாத்திரங்கள் காணப்படுகின்றனவா என்பதைப் புலப்படுத்துவதாக இவ்வாய்க்கட்டுரை அமைகிறது.

**அந்நிய மாதல் குறித்த கருத்தாக்கங்கள்:**

" இயற்கையோடும், சமூதாயத்தோடும் தன்னோடும் பிளவு படாத முறையில் ஆதிப் பொதுமைச் சமூகத்தில் மனிதன் வாழ்ந்தான். வர்க்கச் சமூகம் தோன்றிய நிலையில் தன் உடமை அரசு முதலியவை தோன்றிய நிலையில் மனிதன் இயற்கையிலிருந்து, சமூதாயத்திலிருந்தும் இறுதியாகத் தன்னிலிருந்தும் அந்நியமானான்"[1].

(ஞானி, கடவுள் ஏன் இன்றும் சாகவில்லை ப.79) என்று முதலாளிய உற்பத்தி முறையில் காரணமாக எழுந்த வர்க்க முரண்பாடுகளின் விளைவாகத் தோன்றிய அந்நியமாதல் அந்நியமாக்கப்பட்ட மனிதனின் உருவாக்கம் குறித்து ஞானி குறிப்பிட்டுள்ளார்.

அந்நியமாதல் என்பது காலம் காலமாக கடைபிடித்து வரும் ஒரு கொடிய மனநோய் என்றே கூறலாம். இது அக்காலத்தில் தத்துவங்களும், சமயங்களும் பின்பற்றி வந்த ஒரு பிரச்சனை என்று கூறமுடியும். மனிதன் இயற்கையோடு வாழ்ந்த காலத்தைக் காட்டிலும் நவீன காலத்தில் பொருளாசைகளுக்கும் புலனின்பத்துக்கும் அடிமையாகி மானுட உறவுகள் சீரழியும் நிலையை இக்கால இலக்கிய எழுத்தாளர்கள் கவிதை, கட்டுரை, புதினம், சிறுகதை போன்றவற்றை களமாக எடுத்துக் கொண்டு வெளிப்படுத்துகின்றனர்.

**"மனிதன் தனக்காக உள்ள பிறவி (*a being — fosi - himself*) எனவே அவன் ஓர் இனப் பிறவியாக இருக்கிறான். இவ்விதமாகவே அவன் தனது வாழ்விலும், சிந்தனையிலும் தன்னைத்தானே உறுதிப்படுத்திக் கொள்ளவும் புலப்படுத்திக் கொள்ளவும் வேண்டியுள்ளது."[2]**

என்று மார்க்ஸ் கூறுவதாகக் கருதப்படுகிறது.

**"காயமே இது பொய்யடா, காற்றடைத்தப் பையடா"[3]**

என்பது சித்தர் குரல் மட்டுமா

**"மூடு பல்லக்கின் உள்ளே இல்லை மங்கை"[4]**

(அந்நியமாதல் எஸ்.வி. ராஜதுரை பக்.23)

என்று பசுவய்யவும் அந்நியமாதலின் வேர்கள் நீண்ட காலமாகவே இருந்து வருகின்றன என்பதையும், இது மேலை நாட்டிற்கும் இந்தியச் சமுதாயத்திற்கும் பொருந்தும் என்பதை எஸ்வி ராஜதுரை அந்நியமாதல் நூல் வழியாக அறியமுடிகிறது.

இருத்தலியக் கோட்பாடுகளில் ஒன்றாகவும் மார்ச்சியத்தின் மறுபிரதிபலிப்பாகவும் தோன்றுவது அந்நியமாதல் என்கிறார் ஹெகல்.

அந்நியமாதல் எதார்த்த வாழ்க்கையில், இயற்கை மீது செயல்புரிவதன் மூலமும் சமுதாயத்தில் மற்றவர்களுடன் கொள்ளும் உறவுகள் மூலமும் நிகழ்கிறது.

**"உண்மையில், மனிதனுடைய இனவாழ்வு அவனிடமிருந்து அந்நிய மாக்கப்படுகிறது என்ற கூற்றின் பொருள் ஒரு மனிதன் மற்றவனிடமிருந்து அந்நிய மாக்கப்படுகின்றான்,**

**அவர்களில் ஒவ்வொருவனும் மனிதனின் சாராம்ச இயல்பிலிருந்து அந்நியமாக்கப்படுவது போல என்பதாகும்"[5].**

*(K. Marx., op.cited., p77)*

என்று காரல் மார்க்ஸ் கருத்தினை எஸ்வி. ராஜதுரை அவர்கள் அந்நியமாதல் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அந்நியமாதல் என்பது ஒரு தனி மனிதன் இச்சமூகத்தின் பல்வேறு சூழல்களில் இருந்து விடுபட்டு தனித்து விடப்படும் என்று பொருள் கொள்ளலாம்.

**முதலாளித்துவ மாந்தர்களும் அந்நிய மாதலும்:**

பொருளாதாரம் மற்றும் சமூக மனிதர்களை அந்நியமாக்குவதே முதலாளிய சமுதாயத்தின் பண்பு. சில செயல்பாடுகளில் தங்கள் கருத்துக்களைப் பரப்பி அதைக் கட்டாயத்தி ஏற்றுக் கொள்ள வைக்கின்றனர். மேலும் சமூக அரசியல், மத நம்பிக்கைகளைக் காரணங்களாகக் கூறி மக்களை நம்பச் செய்கின்றனர். இதனைச் சோ. தர்மன் கூகை புதினத்தின் கதை மாந்தர்கள் கொண்டு பதிவு செய்கிறார். கருப்பியும் சண்முகம் பகடையும் தம் மகள் வெள்ளையம்மாளுக்கு திருமணம் செய்து வைக்க நினைக்கின்றனர். இதனை அறிந்த முத்தையாபாண்டியன் அதனைத் தடுத்து தான் நினைத்த மாப்பிள்ளை ஒருவனுக்கு கட்டாயமாக திருமணம் செய்து வைக்க நினைத்தான். இதனை

**"அவ சம்மதிக்கா இல்ல சம்மதிக்காமல் போறா, அதப்பத்தி எனக்கு கவலயில்ல. வார வெள்ளிக்கிழமை இவனுக்கும் ஓம் மகளுக்கும் கல்யாணம் ஆக்கு மேல ஓம்பாடு ஓம் மகபாடு"[6] (சோ. த.கூ. பக்.60)** என்ற கூற்றின் வாயிலாக மனிதனை மனிதன் அந்நியப்படுத்தும் நிலையை சோ. தர்மன் புதினம் வழியாக அறியமுடிகிறது.

**சமூகம் மனிதரை அந்நியப்படுத்துதல்:**

மக்கள் எல்லோரும் பொதுவாகவும் இயல்பாகவும் பயன்படுத்தக் கூடிய இடங்கள் பல உள்ளன. அந்தப் பொது இடங்களிலும் முதலாளித்துவத்தினர் தொழிலாளித்துவத்தினரை ஒடுக்கி ஒடுக்கு முறைகள் நிகழ்த்தப்படும் முறைகளைக் காண முடிகின்றது. இவ்வாறான அந்நியமாதல் மக்களின் உணர்வுகளை வெகுவாகவே பாதிக்கின்றன. சமூகம் மக்களை அந்நியப்படுத்தும் நிகழ்வினை ஆசிரியர்

**"தாயி கொஞ்சம் தண்ணி குடுங்க எந்தூரு? தெக்க வெகு தூரத் தாயி வர்ணம் கீழ்ச்சாதி தான் தாயி. ஆய்ய தள்ளி நின்று கையை ஏந்து ஊத்துறன் சவட்டையன் இரு கைகளையும் ஏந்தினான். வாளியால் இறைத்துக் கொண்டு வந்து தண்ணீரைக் குனிந்து கையேந்தி இருக்கும் சவட்டையன் முன் வந்து நின்று ஊற்றினாள்"[7]. (சோ. த. தூ. ப.65)**

என்று பதிவு செய்திருப்பதன் வாயிலாக அறிய முடிகின்றது.

பெரிய பிள்ளை என்பவருடன் சவட்டையன் பக்கத்து ஊருக்குச் சென்று மாடு வாங்கப் புறப்பட்டான். வெயிலின் தாக்கத்தால் தாகம் எடுக்கவே கிணற்றடிக்குச் சென்று ஒரு பெண்ணிடம் தண்ணீர் கேட்டான். அது முதலாளித்துவ மக்களால் அந்நியமாக்கிய மனிதரின் அவல நிலையை அறிய முடிகிறது.

முதலாளித்துவ மக்களிடம் அடிமைத் தொழில் செய்வதும் அடங்கி நடப்பதும் நடைமுறையில் உள்ளன. அன்றாடம் கூலிக்குத் தவிக்கும் மக்களுக்கு நிலம் தானமாக வழங்கிய பின்பு அம்மக்களை முதலாளித்துவ வர்க்கத்தினர் தடுத்து அவர்களுக்கு கொடுமைகளைப் பல்வேறு கோணங்களில் நிமிர விடாமல் தடுக்கும் பொழுது மேலை நாட்டில் பூர்ஷ்வா அரசின் சட்டங்கள் தான் எனக்கு நினைவில் வந்தது.

***“ஒரு மனிதன் தன் செயலில் தன்னையே எதிர்த்து நிற்பதனால் அவன் இதர மனிதர்களால் எதிர்க்கப்படுகிறான்.”[8]***

*-அந்நியமாதல் எஸ்.வி. ராஜதுரை பக் 113*

என்று எஸ்.வி. ராஜதுரை தன்னுடைய அந்நியமாதல் நூலில் கூறியுள்ள செய்தியானது கூகையில் எதிர்த்துக் கிளம்பும் கிளர்ச்சிக் கூட்டம் கூண்டோடு அழிக்கப்படுகிறது. நல்ல நிலங்களில் எல்லாம் கள்ளி விதை பரப்படுகிறது.

முதலாளித்துவத்தினர் வரும்போது எதிர் நிற்பதோ, சமநிலையில் நடந்து செல்வதோ அவரைத் தாண்டித் செல்வதோ கடுமையாக குற்றமாகக் கருதித் தண்டிக்கப்பட்டனர். இது முதலாளித்துவத்தின் செயல்பாடுகள் அதிகாரத்தின் அத்து மீறல்களையும் வெளிப்படுத்தும் செயல்பாடாகும்.

இதே போன்றதொரு நிகழ்வினைக் கூகை நாவலில் “எல்லாப் பயகளும் பாதையை விட்டு ஒதுங்கி தூர பாதையை விட்டு ஒதுங்கி நின்றார்கள். சீனி துண்டை எடுத்து முழங்கையில் போட்டபடி முதல் அவனால் நின்று கும்மிடவும் எல்லோரும் கும்பிட்டார்கள்”[9]. (சோ.த.கூ.ப.84)

என்று சோ. தர்மன் குறிப்பிடுகிறார்.

சமூகம் சிக்கலின்றி இயங்குவதற்குச் சமூகக் குழுக்களிடையே நல்லுறவு பராமரிக்கப்பட வேண்டும். ஒருவர் மற்றொருவருக்குத் தேவை என்பதை உணர வேண்டும். அவ்வாறு உணரும் போது தான் உறவுகள் வளர்ந்து வலுப்பெறும்.

**வர்க்கம் போராட்டங்களும் வாழ்வும்:**

இனத்தால் அடிமைப்பட்டுக் கிடந்த ஒடுக்கப்பட்ட மக்கள் படிப்படியாகத் தங்களுக்குள் நாமும் மனிதர்கள் தான் என்பதையும் தாங்களும் மற்ற மனிதர்களைப் போல் மனித நேயத்துடன் நடத்தப்பட வேண்டியவர்கள் என்ற உணர்வினையும் பெற்று விட்டனர். அடங்கி வாழ்வது அடிமைத்தனம், அடித்து நொறுக்குவது தலித்தின் குணம் எனும் பாடல் வரிகளுக்கேற்ப திமிறி எழுந்து எதிர்க்கவும் தயாராகி விட்டனர். அந்நியப்படுத்துதலை சமுதாயத்தில் இருந்த உடனே அகற்றப்பட வேண்டும் முதலாளித்துவம் செயல்படும் வழிகளை எல்லாம் கண்டு அவ்வழிகள் அடைக்கப்பட வேண்டும். அழிக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் அதிகாரத்தில் இருப்பவர்களிடமிருந்தோ, அரசியல் தலைவர்களிடமிருந்துதோ வராது. இதற்காகப் பாதிக்கப்பட்ட மக்களும் சமுதாய மாற்றத்தில் அக்கறை கொண்டுள்ளவர்களும் ஒன்று சோத்து ஓர் இயக்கமாக மாறும் இன வேற்றுமைக்கு எதிராகப் போராடினால் தான் சமத்துவத்திற்கான வழிமுறைகள் தோன்றும் எனச் சோ. தர்மன் கூகை நாவலின் வாயிலாகச் சிறந்த கருத்துக்களை வழங்கியுள்ளார்.

உலகில் போராட்டதின் வாயிலாகத் தான் சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குருதியினைக் கொடுக்காமலும், எடுக்காமலும், சமுதாய மாற்றம் சாத்தியம் இல்லை. இதற்குச் சான்றாக

**"திடீரென்று வெடிகுண்டுகள் வெடிக்கும் பயங்கர சத்தம் கேட்டதும் ஜமீன் ஆட்கள் நாலாபுரமும் சிதறி ஓடினார்கள். பயங்கரமான இந்த எதிர்ப்பை அவர்கள் எதிர்ப்பார்த்திருக்க மாட்டார்கள். பிறக்குடிக்குள் ஓடி ஒளிந்தவர்களும் இரத்தக் காயங்களுடன் அலறிக் கொண்டு ஓடினார்கள் ஏறிய ஆட்களுடன் அவசரமாக லாரிகள் இரண்டு புறப்பட்டுச் சென்றன"[10].(சோ. த. கூ. ப.296)** என்று விவரிப்பதிலிருந்து அறிய முடிகிறது.

**விவசாயிகள் நகரத்தில் அந்நியமாதல்:**

காலம் காலமாக மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவு அவற்றை அளிக்கும் விவசாயி மழையின்றி வறுமை காரணமாக நகரத்திற்குச் சென்று தன்னுடைய வாழ்க்கையிலிருந்து மட்டும் அல்லாமல் அவன் கலாச்சாரம் பண்பாடு என்பவற்றிலிருந்து மாறி தன்னைத் தானே அந்நியபடுத்தி அடிமைப்பட்டு வாழும் நிலையை சோ. தர்மன் ஐயா அவர்கள் தூர்வை புதினத்தில் பாத்திரங்கள் வாயிலிhக எடுத்துக்காட்டியுள்ளதை இப்பதியில் காண்போம்.

**"அம்பாரமாய்க் குமிந்து கிடக்கும் பருத்தி அட்டியல் ஒரு புறம், வத்தல் ஒரு பக்கம், மச்சு வீட்டுக்குள் போய்த்திரும்ப முடியாமல் அடைத்துக் கொண்டு கிடக்கும் தானிய மூட்டைகள், நிறை சூலியாய் தானியம் நிறைந்த இரண்டு குலுக்கைகள், வெளி வீட்டில் குமிந்து கிடக்கும் பூசணிக்காய் பீர்க்கங்காய், சுரைக்காய், ஆடுகள் மாடுகள், கோழிகள் இன்னைக்கு தன்னந்தனியாய் இத்தினியாண்டு குச்சு வீட்டுக்குள்"[11] (சோ. த. தூர். பக் 227)** என்று சமசாரியாக சகலத்துடன் வாழ்ந்த பெண்ணொரு நகரத்;தில் வறுமை பட்டு வாழ்வதை நகரத்தோடு வாழும் வாழ்க்கையை ஒப்பிட்டு அந்நியப்படுத்திக் கொள்கிறாள்.

மேலும், நகரத்தில் கடன் வாங்கி வாழும் நிலையைக் கண்டு அதிர்ந்து போகிறாள் பொன்னுத்தாயி உறவு முறைகள் சீரழந்து கலாச்சாரம் கெட்டு கிடப்பதைக் கண்டு மிகவு வியந்து தனிமைப்பட்டு நிற்கின்றாள். அந்நியமாதலை, அந்நியமாகிக் கொள்ளுதல், அந்நியமாக்கப்படுதல் என்று இரண்டு விதமாகப் புரிந்து கொள்ளலாம். இதற்கு உதாரணமாக

"பூசாரி சொன்னபடியே மண்பானைக்கு அரைபானை கறி, கூளத்தைக் போட்டு மூடி வண்டியின் பின்பக்கம் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்திலேயே இருளாண்டிக் கிழவன் திருட்டு முழி முழித்துக் கொண்டு தாயிளி எச்சுவாறிப் பய அங்தான் தின்னய ஒரு மொடா கறி இன்னுமா அடபடல"[12] (சோ. த. தூ. ப. 45)

என்று இருளாண்டியை அனைவரும் வசைபாடுகிறார்கள். ஆனால் மாடத்தியோ அவனை நன்கு அறிந்து அந்நியப்படுத்தாமல் வண்டியில் ஏற்றி ஊரில் மடத்திலே விட்டுவிடுகிறாள். இருளாண்டியின் செயலானது அந்நியமாதலுக்குள்ளான கதை மாந்தராகவேக் காணப்படுகிறது.

உருளைக்குடி கிராமம் செழிப்பாக இருக்கும் பொழுது முதலாளித்துவம் தொழிளாளித்துவம் என்று இல்லாமல் பொதுவுடைமையாக இருந்த கால கட்டத்தில் மனிதர்களிடையே நல்ல உறவு முறைகள் இருந்து வந்துள்ளதைத் தூர்வை புதினம் வெளிப்படுத்துகிறது. மழையின்றி வறுமை ஏற்பட்ட பின்பு பொருளாதார அடிப்படையில் இனங்கள் வேறுபட்டு முதலாளித்துவ நிலை ஓங்கி நின்று, தொழிலாளி வர்க்கத்தினர் அடங்கி வாழக் கூடிய சூழ்நிலைக்கு மக்க அந்நியப்படுதலை தூர்வை புதின பாத்திரங்கள் கொண்டு சோ. தர்மன் விவரித்துள்ளார்.

**தொகுப்புரை:**

இன்றைய சமுதாயத்தில் விலங்கிலிருந்து மனிதன் மாறினான். ஆனால் மனிதரை மனிதன் அந்நியப்படுத்தும் கொடுமைகளையும் நீண்ட காலமாகவே இருந்து வருகிற

அந்நியமாதல், இன்று கலை இலக்கியப் படைப்புக்கான உளவியல் நீதியான கருவாக இருப்பதுடன். பல்வேறு வகையான அறிவுத் துறையினாலும் விவாதிக்கப்படும் ஒரு கருத்தாக்கமாக பிரச்சனையாக உள்ளது.

கூகை புதினம் மனிதர்களிடையே முதலாளித்துவத்தினர் தொழிலாளர் வர்க்கத்தினரை அந்நியப்படுத்திய நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளது. அப்புச் சுப்பன், சீனிகிழவன், மாரி ஆகிய மாந்தர்களின் வழியாக வர்க்கப் போராட்டச் சீர்திருத்தவாதிகளையும், போரிடும் மனிதர்களையும் ஒரு தீவிரமான அந்நியமாதல் தன்மை உடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இப்புதினம் வெளிப்படுத்துகிறது.

தூர்வை புதினத்தில், பெண்களை முன்னிலைப்படுத்துவிட்டு, சமயச் சடங்கு முறைகளால் அவர்களை அந்நியப்படுத்தும் விதத்தைப் பார்க்க முடிகிறது. நகரங்களில் காணப்படும் பலதரப்பட்ட மக்கள், கலாச்சாரம், சிந்தனைகளின் பின்னணியில், இணையும் கிராமப்புற விவசாயிகள் அந்நியப்பட்டு போவதையும் சோ.தர்மன் தன் புதினங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்:**

1. ஞானி, கடவுள் ஏன் இன்னும் சாகவில்லை பக்கம் - 79
2. K. Marx , Capital Volume, I, Progress Publishers, Moscow(nd), PP. 378 — 399
3. வள்ளலார், மேற்கோளிட்டவர் மா. பொசி., வள்ளலார் கண்ட ஒறுமைப்பாடு, இன்ப நிலையம், சென்னை 1965, ப — 931
4. மேலது
5. காரல் மார்க்ஸ் எஸ்.வி. ராஜதுரை அந்நியமாதல்
6. சோ. தர்மன் கூகை புதினம் பக்கம் - 60
7. சோ. தர்மன் தூர்வை புதினம் பக்கம் - 65
8. அந்நியமாதல் எஸ்.வி. ராஜதுரை பக்கம் - 113
9. சோ. தர்மன் கூகை புதினம் பக்கம் - 84
10. சோ. தர்மன் கூகை புதினம் பக்கம் - 296
11. சோ. தர்மன் தூர்வை புதினம் பக்கம் - 227
12. சோ. தர்மன் தூர்வை புதினம் பக்கம் - 43

## *Adikurippukal:*

1. *Nayani , kadavul, yean innum sagavillai pakkam* — 79
2. *K. Marx, Capital. Vol. I. Progress Publishers Moscow (rd), PP* 398-399
3. *Vallalar, Merkolittavar M. Posi, Vallalar kanda orumaipadu, Inba nilai, Chennai* 1965, *p* — 931
4. *Melathu*
5. *Coral Marks merkolittar S.V. Rajadurai Anniyamathal*
6. *S.Dharman Koogai puthinam P* — 60
7. *S. Dharman Thoorvai P* — 65
8. *Anniyamathal S.V. Rajadurai p* -113
9. *S.Dharman Koogai puthinam P* — 84
10. *S.Dharman Koogai puthinam P* — 296
11. *S. Dharman Thoorvai P* — 227
12. *S. Dharman Thoorvai P* — 43

**துணை நூற்ப் பட்டியல்**

1. ஞானி, கடவுள் ஏன் இன்னும் சாகவில்லை? நிகழ், சோலைமுத்தூர், 1997
2. *Capital Volume, I, Progress Publishers, Moscow(nd)*
3. ராஜதுரை, எஸ்.வி - அந்நியமாதல்

முதற்பதிப்பு — பிப்ரவரி 1979

இரண்டாம் பதிப்பு — ஆகஸ்ட் 2022

*Ge — A, New No,* 2, *Old No.* 25,

17*th* *East Street, Thirvanmiyur,*

*Chennai* — 600 041

4. தர்மன். சோ — தூர்வை, அடையாளம் பதிப்பு 2017

5. தர்மன். சோ - கூகை, அடையாளம்

## Thunai Noor Pattiyal:

1. Nayani, Kadavul yean innum sagavillai? Nigal, Solai muthur, 1997
2. Capital, Vol I (Progress Publishers Moscow .nd)
3. S.V. Rajadurai Anniyamathal
   Mutharpathippu — February — 1979
   Irandam pathippu — August — 2022
   Ge —A, New No.2, Old No.25,
   17th East Street, Thirvanmiyur,
   Chennai — 600 041.
4. S. Dharman, Thoorvai, Adaiyalam pathippu - 2017
5. S. Dharman, Koogai, Adaiyalam

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com